முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.7.2023) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் – கூடுவாஞ்சேரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் 13 கோடியே 7 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 புதிய பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடங்கள் மற்றும் சென்னை – அடையாறு, விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், வேலூர், திருநெல்வேலி மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் 3 கோடியே 42 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட 7 பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி. கீதாஜீவன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே. அமுதவல்லி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை கூடுதல் இயக்குநர் திருமதி ச.ப. கார்த்திகா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

யமுனை ஆற்றில் வெள்ள அபாயம்!

புதுடெல்லி, ஜூலை 15 -

டெல்லியில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், யமுனை ஆற்றில் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. யமுனை ஆற்றின் நீர் வெளியேறி சாலைகளுக்கு வரும் புகைப்படங்களும் வெளியேறி அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. இதேபோல், அரியானா மாநிலம் பரீதாபாத்திலும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளில் ஏற்பட்ட வெள்ள அபாயத்தைத் தொடர்ந்து யமுனை ஆற்றங்கரைக்கு அருகில் வசிக்கும் குறைந்தது 90 பேரை காவல்துறை மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் வெளியேற்றியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மீட்கப்பட்டவர்கள் பெரும்பாலும் அமிபூர் கிராமத்தில் வசிப்பவர்கள் மற்றும் அங்குள்ள பண்ணைகளில் வேலை செய்த தொழிலாளர்கள் என்று அவர்கள் தெரிவித்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.07.2023) கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் 70வது பிறந்தநாளையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்தார். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு ஆகியோர் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.7.2023) தலைமைச் செயலகத்தில், 2022 –ஆம் ஆண்டிற்கான இந்திய குடிமைப் பணிகள் தேர்வில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 33 வெற்றியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கி, பாராட்டினார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பொதுத்துறை செயலாளர் க. நந்தகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

“ உமது திரைமொழியும் கவிமொழியும்

தமிழ்மொழியை இன்னும் பல்லாண்டு வளர்க்கட்டும்!”

கவிப்பேரரசு வைரமுத்துவின் 70வது பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூலை 15 -

கவிப்பேரரசு வைரமுத்துவின் 70-வது பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், ‘உமது திரைமொழியும், கவிமொழியும் தமிழ்மொழியை இன்னும் பல்லாண்டு வளர்க்கட்டும்’ என வாழ்த்தியுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் 70 வது பிறந்த நாளையொட்டி சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச்செய்தி வருமாறு:-

கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்க்கவிக்கு இது எழுபதாவது பிறந்தநாள். இன்னும் பல படைப்புகளைத் தருக கவிஞரே!

உமது திரைமொழியும் கவிமொழியும் தமிழ்மொழியை இன்னும் பல்லாண்டு வளர்க்கட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ரூ.3.42 கோடியில் புதுப்பிக்கப்பட்ட 7 மகளிர் விடுதி கட்டிடங்கள்-

கூடுவாஞ்சேரி - திருச்சியில் ரூ.13.07 கோடியில் 2 புதிய மகளிர் விடுதிக் கட்டிடங்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூலை 15 -

ரூ.13.07 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 2 புதிய பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடங்கள் மற்றும் ரூ.3.42 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட 7 மகளிர் விடுதிக் கட்டடங்களை - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடுமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.7.2023) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ் சேரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் 13 கோடியே 7 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 புதிய பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடங்கள்மற்றும் சென்னை - அடையாறு,விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், வேலூர், திருநெல்வேலி மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் 3 கோடியே 42 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட 7 பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

பணிபுரியும் இடங்களில் பெண்களின் பங்களிப்பில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தமிழ்நாட்டில் பெரும்பான்மையான பெண்கள் கிராமங்கள், சிறு நகரங்களிலிருந்து பெருநகரங்களுக்கு பணி நிமித்தம் இடம் பெயர்ந்து வருகின்றனர். அவ்வாறு பணி நிமித்தமாக பெண்கள் தங்களது வீட்டை விட்டு வெளியில் தங்க வேண்டிய சூழ்நிலை யில், அவர்களுக்கு குறைந்த வாடகையில், பணிபுரியும் இடத்திற்கு அருகில் தரமான மற்றும் பாதுகாப்பான தங்கும் விடுதிகள் கிடைப்பது அவசியத் தேவையாக உள்ளது. பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளின் தேவைகளை உணர்ந்த தமிழ்நாடு அரசு, பொருளாதார ரீதியாக நலிவுற்ற மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கான பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகளை தமிழ்நாட்டின் பல் வேறு மாவட்டங்களில் அமைத்து வருகிறது.

பணிபுரியும் மகளிருக்கான புதிய விடுதிகளை உருவாக்கிட “தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவ னம்” தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டு, புதிய விடுதிகளை கட்டுதல், பழைய விடுதிகளை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பணிபுரியும் மகளிர் விடுதிகளின் தேவை தற்போது அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு, செங்கல்பட்டு மாவட்டம் - கூடுவாஞ்சேரி யில் 7 கோடியே 44 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவிலும், திருச்சிராப்பள்ளியில் 5 கோடியே 65 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் செலவிலும், என மொத்தம் 13 கோடியே 7 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் செலவில் 226 மகளிர் தங்கும் வகையில் கட்டப்பட்டுள்ள 2 புதிய பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

மேலும், சென்னை - அடையாறு, விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், வேலூர், திருநெல்வேலி மற்றும் பெரம்ப லூர் ஆகிய இடங்களில் 3 கோடியே 42 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் 458 மகளிர் தங்கும் வகையில் புதுப்பிக்கப்பட்ட 7 பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

உடனடியாக பயன்பாட்டிற்கு வரும் இத்தங்கும் விடுதிகளில் தங்குவதற்கு www.tnwwhcl.in என்ற இணையதளத்தின் மூலம் பணிபுரியும் மகளிர் விண்ணப்பிக்கலாம்.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே. அமுதவல்லி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை கூடுதல் இயக்குநர் திருமதி ச.ப.கார்த்திகா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

‘முதல்வரின் முகவரி’த்துறையில் பெறப்பட்ட

மனுக்களில் 86 சதவிகிதம் தீர்வு காணப்பட்டது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தகவல்!

சென்னை, ஜூலை 15 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வரின் முகவரித்துறை செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. முதல்வரின் முகவரித்துறையில் பெறப்பட்ட மனுக்களில் 86 சதவிகித மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.07. 2023) தலைமைச் செயலகத்தில், முத ல்வரின் முகவரி துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, முதல்வரின் முகவரித் துறையில் பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மாவட்டங்களில் மேற்கொண்ட சுற்றுப்பயணங்களின் போது பெறப்பட்ட மனுக்கள் மீதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

கடந்த 1.1.2023 முதல் 30.06.2023 வரை முதல்வரின் முகவரித் துறை மூலமாக பெறப்பட்ட 3.42 இலட்சம் மனுக்களில் 2.94 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அதாவது 86 சதவிகித மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மனுக்களின் தீர்வு முறைகளில், எண்ணிக்கையை குறைப்பதோடு மட்டுமல்லாமல், தீர்வின் தன்மையை பொறுத்து தீர்வு செய்யப்பட்ட மனுக்கள் A, B & C என தர வரிசைப்படுத்தப்படுகிறது. அவ்வாறு தீர்வு செய்யப்பட்ட மனுக்களின் தர வரிசை மதிப்பீடுகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆகிய துறைகளில் அதிக மனுக்கள் பெறப்பட்டுள்ளதால் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் இதில் தனிக்கவனம் செலுத்தி விரைவில் மனுக்கள் மீது தீர்வு காணுமாறு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

மேலும், முதலமைச்சரின் உதவி மையத்தின் இலவச அழைப்பு எண் 1100 மூலமாக தொடர்பு கொள்ளும் நபர்களின் அழைப்புகளை ஏற்பது, அழைப்பின் தன்மையைப் பொறுத்து கோரிக்கைகளாக பதிவு செய்வது, ஏற்கனவே பதிவு செய்த மனுவின் நிலவரம் குறித்து தெரியப்படுத்துவது மற்றும் மனுதாரர்களை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு மனுக்களின் தரம் கண்காணித்தல் மற்றும் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் குறித்த சேவைகளின் மதிப்பீடுகள் பெறுவது போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் AI Chatbot போன்ற புதிய தொழில் நுட்பங்கள் வாயிலாக விரைவாக பொது மக்களின் கோரிக்கைகளை தீர்வு காண புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட ஆய்வின்போது, மனுதாரர்களின் கோரிக்கைகள் தீர்வு காணப்பட்டுள்ளதை உறுதிசெய்யும் பொருட்டு, முதலமைச்சர் அவர்கள், ஒரு சில மனுதாரர்களை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு கேட்டறிந்தார்.

அவர்களில் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த மனுதாரரின் குழந்தைக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காக ரூ.22 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு 19.06.2023 அன்று கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது குறித்தும்;

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டத்தைச் சேர்ந்த மாணவி பட்டப்படிப்பு பயில்வதற்கு கல்வி உதவித்தொகை ரூ.50,000/ வழங்கப்பட்டது குறித்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, மனுக்களை திறம்படவும், விரைவாகவும் தீர்வு செய்த தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டாட்சியர் எச். சவுகத் அலி மற்றும் தென்காசி மாவட்டம், ஆலங்குளம் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஜெ. ஜெயபால் ஆகியோரை பாராட்டியும், சுணக்கமாக செயல்படும் அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், நில நிர்வாக ஆணையர் எஸ். நாகராஜன், முதல்வரின் முகவரித் துறை சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த. மோகன், முதலமைச்சரின் தனிப்பிரிவு தனி அலுவலர் ஆர். ராம்பிரதீபன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

நேற்று முன்தினம் (13.07.2023) கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "எழுத்தாளர் கலைஞர்' என்ற குழுவின் கூட்டம் இக்குழுவின் தலைவரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இணைத் தலைவர்கள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், உறுப்பினர்கள் ஆர். பாலகிருஷ்ணன், இஆப. (ஓய்வு), ஏ.எஸ். பன்னீர்செல்வன், கலாப்பிரியா, எஸ். ராமகிருஷ்ணன், ப.திருமாவேலன், இமையம், அறிவுமதி, வி.எம்.எஸ். சுபகுணராஜன், கவிஞர் சல்மா, தமிழ்மகன், பொதிய வெற்பன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான

கல்வி உதவித் தொகை இரண்டு மடங்காக உயர்வு!

தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, ஜூலை 15-

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையை இரண்டு மடங்காக உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. தற்போது வெளியிடப்பட்டுள்ள அரசாணை காரணமாக 22,300 மாணவர்கள் பயன்பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் இதற்கான அரசாணையை வெளியிட்டுள்ளார். அதில், ‘மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையாக அவர்கள் பயிலக்கூடிய வகுப்பு, படிப்பு ஆகியவற்றுக்கு ஏற்றவாறு 1,000 ரூபாய் முதல் 7,000 ரூபாய் வரை வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2013 ஆண்டு நிதியாண்டில் இருந்தே இந்த உதவித்தொகை வழங்கப்பட்டு வரும் நிலையில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான திட்டத்தை ஆய்வு செய்து அவர்களுக்கான கல்வி உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டுமென கோ ரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தது.

தொடர்ந்து இந்த கோரிக்கை பரிசீலனையில் இருந்த நிலையில் 2023-24 நிதியாண்டில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை உயர்த்தி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதற்காக 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கூடுதல் செலவு ஏற்பட்டாலும் இரண்டு மடங்காக மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என தற்போது அரசாணை பிறப்பிக்கப் ப ட்டுள்ளது.

இதனால் ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்கிறது. 6 முதல் 8ஆம் வகுப்பு வரை வழங்கப்படும் கல்வி உதவித்தொகை 3,000 ரூபாயில் இருந்து 6,000 ரூபாயாக உயர்கிறது. 9 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஆண்டு கல்வி உதவித் தொகை 4,000 ரூபாய் இருந்து 8,000 ரூபாயாக உயர்கிறது.

பட்டப்படிப்பு பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வழங்கப்படும் 6,000 ரூபாய் இனி 12,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். தொழிற்கல்வி, முதுகலை பட்டப்படிப்பு மாணவர்களுக்கு 7,000 ரூபாயிலிருந்து 14,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் - 9

ம.அ.9.ந.க.எண்.இ1 / 595 / 2023

மின்னணு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது
நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்

வ. எண்	பணியின் விவரம்	பணியின் மதிப்பு	முன் வைப்புத் தொகை	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை,
1	மண்டலம்-9, பகுதி-26, வார்டு எண்.112ல் உள்ள வெள்ளாளர் சாலையில் புதிய சமூக நலக்கூடம் (தரை தளம் மற்றும் முதல் தளம்) கட்டும் பணி	189.08 இலட்சங்கள்	பணியின் மதிப்பில் 1 சதவீதம்	முதல் வகுப்பு

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **03.08.2023 மாலை. 03.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **04.08.2023 மாலை. 03.30 மணி**

செ.ம.தொ.இ / 3656 / ஒப்பந்தப்புள்ளி / 2023

மா.வ.அ / மண்டல அலுவலர்
மண்டலம்-9

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

GREATER CHENNAI CORPORATION
SPECIAL PROJECTS DEPARTMENT

S.P.D.C.No B1/0577/2022

e -TENDER NOTICE

e - Tender is invited for the following work in Two Cover System as per details furnished below.

S.P.D.C.No.B1/0577/2022:- Establishment of additional Pond at Villivakkam Tank in Dn.94, Zone - VIII under Smart City Fund - Approximate value of work - Rs.7.50 Cr. (Inclusive of GST) - Submission of E.M.D. **Rs.7,50,000/-**

Tender document will be available in website	:	**https://tntenders.gov.in**
Pre-bid meeting date and time	:	**24.07.2023 at 3.00 p.m**
Tender last date and time of submission	:	**16.08.2023 upto 3.00 p.m.**
Tender opening date and time	:	**17.08.2023 at 3.00 p.m**

DIPR / 3653 / Tender / 2023

Superintending Engineer / Spl. Projects.

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்